**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2025– ம் ஆண்டு நவம்பர் மாதம் 17–ம் நாள் திங்கள்கிழமை**

**IA No.7/2025**
**in**
**OS no.7/2023**
**–––**

1. ரா.ஈஸ்வரன்
2. ரா. ராஜாஜி
3. ரா. ராஜபாண்டி

.....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

க. செல்வி .....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 10.11.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருSPT.சேதுராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டியிருப்பதால் வழக்கு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்ததை Reopen செய்து தனது தரப்பு சாட்சிகளை அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட சி.பி.சி. செக்ஷன் 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்:</u>**

வழக்கின் விசாரணையின்போது தனக்கும் உடல்நிலை சரியில்லாமல் போனதாலும், தன் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்ய கால அவகாசம் இல்லாமல் போய்விட்டது என்றும், தங்கள் தரப்பில் தாவா சொத்து சம்மந்தமாக சாட்சிகளை சமூகம் நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்ய வேண்டியதாக இருப்பதால் வழக்கும் வாதுரைக்காக 23.10.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டிருப்பதை Reopen செய்து தன் தரப்பு சாட்சிகளை சமூகம் நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிருரை சுருக்கம்:–</u>**

வழக்கில் வாதி, பிரதிவாதி தரப்பு விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்து வாதுக்காக வாய்தா கடந்த 23.10.2025ம் தேதி ஏற்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் 2ம் மனுதாரர்/2ம் வாதி வழக்கை இழுத்தடிக்கவேண்டுமென்ற கெட்ட உள்நோக்கத்துடன் இடைக்கால மனுவை (Reopen) தாக்கல் செய்துள்ளதாகவும்,

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.11.17 16:55:25 +0530

மனுவை கடுமையாக ஆட்சேபிக்கிறதாகவும், எனவே மனுதாரரின் இடைக்கால மனுவை தள்ளுபடி செய்ய உத்தரவிடவேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

4. இருபுறமும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 2ம் மனுதாரர்/2ம் வாதி இந்த நிர் மனு அபிடவிடை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு அபிடவிட்டின் 2வது பாராவில் விசாரணையின்போது 2ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதாகவும் தங்களது தரப்பில் விசாரணை செய்ய காலஅவகாசம் இல்லாமல் போய்விட்டது என்றும், அதுவும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும், மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து சம்மந்தமாக சாட்சிகளை சமூக நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்யவேண்டியதாக இருப்பதால் வாதுரைக்காக கடந்த 23.10.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்ததை ரீஓபன் செய்து தனது தரப்பு சாட்சிகளை சமூக நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்யவேண்டியதாக இருக்கிறதாகவும், எனவே வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருப்பதை ரீஓபன் செய்து தன் தரப்பில் சாட்சிகளை சமூக நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட வேண்டி இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மாறாக, எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கவுண்டர் அபிடவிட்டில் வாதி பிரதிவாதிகள் தரப்பு விசாரணை அனைத்தும் முடிவடைந்து வாதுரைக்காக கடந்த 23.10.2025ம் வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் 2ம் மனுதாரர்/2ம் வாதி வழக்கை இழுத்தடிக்கவேண்டுமென்ற கெட்ட நோக்கத்துடன் ரீஓபன் செய்திட சொல்லி இந்த நிர் மனு தாக்கல் செய்திருப்பதாகவும், மனுவை தள்ளுபடி செய்ய கோரி வாதிடப்பட்டது.

7. மனு அபிடவிட் மற்றும் கவுண்டர் ஆகியவற்றை பரிசீலனை செய்த வகையில், வழக்கும் வாதுரைக்காக போடப்பட்டுள்ள சூழ்நிலையில் வாதிகள் தரப்பில் காலம் கடந்து சாட்சிகள் விசாரணை செய்யவேண்டுமென சொல்லி C.R.P. Rule 75 மற்றும் Section 151 CPCன் கீழ் ஆவணங்களை வரவழைத்து அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் இணை ஆணையர் அவர்களை சமூக நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க ஏதுவாக அனுமதி கோரி பிரிதொரு மனுவும் இந்த நிர் ரீஓபன் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் காலம் கடந்து வாதுரைக்காக போடப்பட்டுள்ள இவ்வழக்கை ரீஓபன் செய்யக்கோரியுள்ள சூழ்நிலையிலும் இம்மனு அனுமதிக்காத பட்சத்தில் வழக்கு இறுதிநிலை எட்டுவதில் மனுவை அனுமதிப்பதனால் ஏற்படும் காலதாமதத்தை விட கூடுதல் கால விரையம் ஏற்படும் என்ற அடிப்படையிலும், மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாகவும் மனுதாரர் கூடிய விரைவில் சாட்சிக்கு சம்மன் செய்து விசாரணை செய்து முடித்திட அறிவுறுத்தி இந்த ரீஓபன் மனு அனுமதித்து உத்தரவிட வேண்டியது அவசியமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.17 16:55:32 +0530

முடிவாக, மனுதாரர்களின் மனு அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ரூ.500/- செலவுத்தொகை செலுத்திவைக்கவேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த நிர் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் வருடம் நவம்பர் மாதம் 17-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.17 16:55:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.17 16:55:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**IA No.7/2025**

**in**

**OS no.7/2023**

**உத்தரவு**

**நாள்:17.11.2025**